1972 டிசம்பர் 6]

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, T. B. treatment is not completely based on provision of beds and therefore providing beds is possible only in certain areas where we can get wide space and other necessary facilities for the people treated there like Perunthurai and other sanatoria. This hospital is linked with the Education department and most of the people connected with it are highly specialised in the subject.

உட்லண்ட்ஸ் ஒட்டல் தொழிலாளிகள்.

*48 வினு.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் பணியாற்றும் தொழிலாளர்களில் பலர் போதிய நாட்கள் பணிபுரிந்தும் நிரந்தரம் செய்யப் படாமல் இருக்கிறுர்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உட்லண்ட்ஸ் ஓட்டலில் சுமார் 307 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுள் 213 பேர் 6 திங்கள் காலப்பணி முடித்தவர்கள். 94 பேர் 6 திங்கள் காலப்பணியை இன்னும் முடிக்காதவர்கள். பணியை முறைப்படுத்துவதென்னும் கோட்பாடு ஓட்டல் தொழிலில் பொதுவாகப் பின்பற்றப்படுவதில்லை. எனவே, அவர்கள் ஆறு திங்கள் கால அளவுப் பணியை முடித்தவுடன் அவர்களுடைய பணி நிலையானதாக்கப்பட்டுள்ளது என்பதற்கு எழுத்துமூலமான ஆணை எதுவும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆறு திங்கள் கால அளவுப் பணியை முடித்த பின் தொழிலாளர் ஒருவர், தவறுன முறையில் தமது பணி இறுதி செய்யப்படுவதற்கு எதிராக மேல் முறையீடு செய்துகொள் வதற்குத் தகுதியுடையவராவார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த நிலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் பணி செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல ; எல்லா ஓட்டல் தொழிலாளர்களுக்கும், அவர்கள் ஆறு மாதம் பணி புரிந்திருந்தால், அவர்களை நிரந்தரமான பணியாளர்களாக்க வேண்டும். ஆனல் ஓட்டல் முதலாளிகள் அவர்களை ஆருவது மாதம் வரும்போது வேலை நீக்கம் செய்யப்பட்டதாக காட்டிவிடுகிறுர்கள். இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்படாவண்ணம் இருக்க "மே" தின விழாவில் ஓட்டல் தொழிலாளர்கள் நடத்திய கூட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றிய நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள், 'ஒருவர் வேலையில் சேர்ந்தவுடன் அவருக்கு சர்வீஸ் "கார்டு" கொடுத்துவிட வேண்டும். அந்த கார்ட்டின் படி ஆறு மாதம் ஆனவுடன் அவர் நிரந்தரமாக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தை அரசாங்கம் உடனடியாக செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கருத்து அரசினரால் தக்கநேரத்தில் ஆய்வு செய்யப் படும்.